2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

முற்பகல் 10-20

திரு. இரா. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட குளித்தலை வட்டாட்சியர் அலுவலகத்தின் பழமையான கட்டடத்தை இடித்துவிட்டு, புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டவேண்டும் என்று கடந்த 2007 ஆம் ஆண்டு நான் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதன்முதலாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய, அந்த குளித்தலைத் தொகுதிக்கு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். கடந்த 13-10-2008 அன்று வருகை தந்திருந்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த வருவாய் ஆய்வாளர்கள் குடியிருப்பையும் கட்டுவதற்கு இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கவேண்டுமாய் உங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்துவிட்டேன், கண்டிப்பாக இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

57—

சுற்றுலாப் பேருந்து

***62746—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 பிப்ரவரி 24

(அ) சென்னை மாநகரில் சிறப்புச் சுற்றுலாப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையைச் சுற்றிப் பார்க்க தினசரி காலை 8-00 மணி முதல் மதியம் 1-00 மணி வரையிலும், மதியம் 1-30 மணி முதல் மாலை 6-30 மணி வரையிலும் நாள்தோறும் இரு முறை, சென்னையில் புகழ்பெற்ற இடங்களுக்கு, சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பேருந்துகள்மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியைப்போல சென்னையிலே மக்களுக்கு நன்கு செய்தி சேருகிற அளவுக்கு விளம்பரப்படுத்தி, சென்னையிலே இருக்கிற அண்ணாசதுக்கத்தில் ஆரம்பித்து, அதைத் தொடர்ந்து சென்னையிலே புகழ்பெற்ற பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்க்கிற அளவிற்கு—ஒரு நாள் முழுவதும் டெல்லியிலே காலை 8-00 மணிக்கு ஒரு இடத்திலே புறப்பட்டால், மாலை வருகிறபோது எல்லா சுற்றுலா இடங்களையும் பார்த்து வரலாம்—அதேபோல, சென்னையில் ஆரம்பித்து வண்டலூர் வரை இருக்கிற பகுதிகளுக்குச் சிறப்புச் சுற்றுலாப் பேருந்துகளை இயக்கி தமிழகத்திலே இருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கும், வட மாநிலங்களிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கும் guide-களோடு சேர்த்து ஏற்பாடு செய்து, வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருக்கிற சுற்றுலாப் பேருந்துகளையும் ஏற்பாடு செய்து, அவர்களுக்கு அந்தச் செய்தியை விளம்பரப்படுத்தினால் சுற்றுலாத் துறைக்கும் வருமானம் பெருகும், சென்னையினுடைய சிறப்புகளும் உலக மக்களுக்குத் தெரியும். எனவே, அந்த அளவிலே தமிழகம் முழுவதும் இருக்கிறவர்களுக்கு முறையான பஸ் வசதியும், இந்தியா முழுவதும் இருக்கிற வட இந்தியர்களுக்கும் Hindi-யிலே explain பண்ணிச் சொல்கிற அளவுக்குச் சுற்றுலாப் பேருந்து வசதியும், வெளி நாட்டிலிருந்து வருகிறவர்களை ஈர்ப்பதற்கு ஆங்கில மொழிப்

2009 பிப்ரவரி 24]

புலமையோடு இருக்கிறவர்களின் வசதியையும் செய்து கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுலாத் துறையின் சார்பாக 24 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 24 பேருந்துகளில் 2 Volvo பஸ்களும், குளிர்சாதன வசதி பேருந்துகள் 12-ம், குளிர்சாதன வசதி இல்லாத பேருந்துகள் 10-ம் ஆக 24 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுபோக, கடந்த 20 ஆம் தேதி உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம் hop on-hop off என்ற 4 பஸ்களை இயக்கி இருக்கிறார்கள். எங்கு வேண்டுமானாலும் இறங்கலாம், எங்கு வேண்டுமானாலும் ஏறலாம் என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 4 பஸ்கள் மேலும் இயக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவு செய்யக்கூடிய அளவுக்கு இன்றைக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையிலிருந்து புறப்பட்டு ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், மகாபலிபுரம், பாண்டிச்சேரி போன்ற பகுதிகளுக்கும் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் சுற்றுலாப் பேருந்துகள் இயக்குவதற்கும், வட மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் தமிழகத்திலே இருக்கிற நவக்கிரகத் தலங்களையெல்லாம் பார்ப்பதற்கு சென்னையில் இருந்து தமிழகத்தில் இருக்கிற நவக்கிரகக் பகுதிகளுக்குச் சென்று, பார்வையிடுவதற்கு சிறப்புப் பேருந்துகள் இயக்குகிற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள 29 வகையான திட்டங்களில்

நீங்கள் சொல்லக்கூடிய திட்டங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

மராமத்து

***51163—திரு. எச். அப்துல் பாசித்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி பெருமாள் கோயிலை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகர், அருள்மிகு பெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயில் முழுமையாக திருப்பணி செய்திட வேண்டிய நிலையில் உள்ளது. இதற்கு உத்தேசமாக ரூ.60 இலட்சம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகளை செய்திட திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. முழு மதிப்பீட்டுத் தொகையும் அரசு நிதியில் வழங்கிட வழிவகையும் இல்லை. ஆகவே, இத்திருக்கோயிலின் திருப்பணியில் பொது மக்கள் தங்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி பங்களிப்பு அளிக்க முன்வரும் நிலையில், பொது மக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்கு மிகாது இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் நிதி உதவி வழங்கிப் பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.